பிரஸார் பாரதி

அகில இந்தியவானொலி, சென்னை- 4

22 03 2023**WEDNESDAY** 06 45 **AM**

வணக்கம், ஆல் இண்டியாரேடியோ, சென்னை - மாநிலசெய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியாவுக்கானசர்வதேசதொலைத்தொடர்பு மற்றும் கண்டுபிடிப்புக்கானமையத்தைபிரதமர் திருநரேந்திரமோடி இன்று புதுதில்லியில் தொடங்கிவைக்கிறார்.
- ஆதார் கட்டமைப்பைதொழில்நுட்பரீதியாகவலுப்படுத்துவதற்கு இந்தியதனிநபர் அடையாளஆணையம் நடவடிக்கைஎடுத்துள்ளதாகமத்தியஅரசுதெரிவித்துள்ளது.
- இயற்கைவிவசாயத்தைஊக்குவிக்க, குடியரசுதினத்தன்றுநம்மாழ்வார் பெயரில் ஐந்துலட்சம் ரூபாய் பரிசுவழங்கப்படும் என்றுமாநிலஅரசுஅறிவித்துள்ளது.
- உலகதண்ணீர் தினத்தைமுன்னிட்டு, தமிழகம் முழுவதும் கிராமசபைக் கூட்டங்கள் இன்றுநடைபெறுகின்றன.
- இந்தியா— ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவதுமற்றும் இறுதிஒருநாள் கிரிக்கெட் போட்டி, இன்றுசென்னையில் நடைபெறுகிறது

>>>>><<<<<

இந்தியாவுக்கானசர்வதேசதொலைத்தொடர்பு மற்றும் கண்டுபிடிப்புக்கானமையத்தைபிரதமர் திருநரேந்திரமோடி இன்று புதுதில்லியில் தொடங்கிவைக்கிறார்.

ஜெனிவாவைதலைமையிடமாகக் கொண்டுசெயல்படும் இந்தமையம், ஐ நா-வின் தகவல் தொடர்புக்கானதனிநிறுவனமாகசெயல்படும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் தொடங்கிவைக்கப்படும் புதியமையத்துக்கானநிதியைமுழுமையாகமத்தியஅரசுவழங்க உள்ளது.

இந்தியா, நேபாளம், பூட்டான், பங்ளாதேஷ், இலங்கை, மாலத்தீவுகள், ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகியநாடுகளைஒருங்கிணைத்து இந்தமையம் உருவாக்கப்பட்டுள்ளதுஎன்றும், இந்தமையத்தின் மூலம் இந்தநாடுகளுக்கு இடையேயானபொருளாதாரஒத்துழைப்பு வலுப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரத் ஆறு-ஜி தொலைநோக்குஆவணத்தையும் பிரதமர் இன்றுவெளியிடவுள்ளார்.

>>>>><<<<<

ஆதார் கட்டமைப்பைமேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தியதனிநபர் அடையாளஆணையம் அதனைதொழில்நுட்பரீதியாகமேம்படுத்துவதற்கானநடவடிக்கைகளைஎடுத்துள்ளது.

இத்தகவலைதெரிவித்துள்ளமத்தியமின்னணுதகவல் தொழில்நுட்பஅமைச்சகம், ஆதார் கட்டமைப்பைவலுப்படுத்தும் வகையில் புதியஅம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது.

ஆதார் கட்டமைப்பின் மூலம் ஆயிரத்து 670-க்கும் மேற்பட்டமத்தியமாநிலஅரசுகளின் மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுவருவதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசஅளவிலும் ஆதார் கட்டமைப்பைதிறம்படபயன்படுத்தும் வகையில் பாதுகாப்பு அம்சங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகமத்தியதகவல் தொழில்நுட்பத்துறைஅமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதிமுர்மு இன்றுகுடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில், இந்தஆண்டிற்கானபத்மவிருதுகளைவழங்குகிறார்.

அறிவிக்கப்பட்ட 106 பத்மவிருதுகளில் 6 பேருக்குபத்மவிபூஷன் விருதும், 9 பேருக்குபத்மபூஷன் விருதும், 91 பேருக்குபத்மஸ்ரீ விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

இவ்வாண்டு 19 பெண்கள் பத்மவிருதுகளைபெறுகிறார்கள்.

குழந்தைகளுக்குவயிற்றுப்போக்குஏற்படும்போதுஅளிக்கப்படும் **ORS** கரைசல் தயாரிப்பில் முன்னோடியாகவிளங்கிய**DilipMahalanobis-**க்குபத்மவிபூஷன், மறைவுக்குபிந்தையவிருதாகவழங்கப்படுகிறது.

சமாஜ்வாதிகட்சியின் நிறுவனர் திரு. முலாயம்சிங் யாதவ், புகழ்பெற்றதபேலாகலைஞர் ஜாஹீர் உசேன் ஆகியோருக்கும் பத்மவிபூஷன், மறைவுக்குபிந்தையவிருதாகவழங்கப்படுகிறது.

கன்னடநாவல் ஆசிரியர் பைரப்பா, தொழிலதிபர் குமார்மங்கலம் பிர்லா, சமூக தன்னார்வலர் சுதா மூர்த்திஆகியோருக்குபத்மபூஷன் விருதுவழங்கப்படுகிறது.

>>>>><<<<<

உகாதி, குடிபத்வா, செட்டிசந்த், நவ்ரே, சைத்ராசுக்லா, சஜிபு எனபல்வேறுபெயர்களில் இன்று புத்தாண்டைகொண்டாடும் மக்களுக்குகுடியரசுத்தலைவர் திருமதிதிரௌபதிமுர்மு, குடியரசுதுணைத்தலைவர் திரு ஜக்தீப் தங்கர் உள்ளிட்டதலைவர்கள் வாழ்த்துதெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

2021-ஆம் ஆண்டில் அதிகஅளவு சிறுதானியங்கள் உற்பத்திசெய்தநாடாகவும், ஏழாவதுபெரியஏற்றுமதிநாடாகவும் இந்தியாதிகழ்வதாகமத்தியவேளாண்துறைஅமைச்சர் திருநரேந்திரசிங் தோமர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைதெரிவித்தஅமைச்சர், நாட்டில் கம்பு, சோளம், வரகு, சாமை, திணைஉள்ளிட்டசிறுதானியங்கள் விளைவிக்கப்படுவதாககூறினார்.

இந்தியசிறுதானியஆராய்ச்சிநிறுவனம் உலகஅளவில் சிறுதானியஉற்பத்திக்கானதொழில்நுட்பங்களைவழங்குவதில் சிறந்தமையமாகவிளங்குகிறதுஎன்ற அங்கீகாரத்தைபெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் 14 மாநிலங்கள் அதிகஅளவு சிறுதானியங்களைஉற்பத்திசெய்யும் மாநிலங்களாகதெரிவு செய்யப்பட்டு, தேசியஉணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் தேவையானஉதவிகளைமத்தியஅரசுசெய்துவருவதாகவும் திருநரேந்திரசிங் தோமர் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் வரும் நிதிஆண்டில் வேளாண் துறைக்காக 38 ஆயிரத்துதொள்ளாயிரத்துநான்குகோடி ரூபாய் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதுஎன்றுவேளாண்துறைஅமைச்சர் திருஎம் ஆர் கேபன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் வரும் நிதிஆண்டிற்கானவேளாண் நிதிநிலைஅறிக்கையைநேற்றுதாக்கல் செய்துபேசியஅவர், இயற்கைவிவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளைஊக்குவிக்கநம்மாழ்வார் பெயரில் குடியரசுதினத்தன்றுஐந்துலட்சம் ரூபாய் பரிசுவழங்கப்படும் என்றுதெரிவித்தார்,

கேழ்வரகு, கம்பு, சாமை, திணைஉள்ளிட்டசிறுதானியவகைகளைஅதிகஅளவில் விளைவிப்போருக்குபரிசுவழங்கப்படும்,

>>>>><<<<<

தமிழ்நாட்டில் உள்ளஅனைத்துகிராமஊராட்சிகளிலும் இன்றுகிராமசபைக் கூட்டங்கள் நடைபெறும் எனமாநிலஊரகவளர்ச்சித்துறைஅறிவித்துள்ளது.

இந்தஆண்டுமுதன் முறையாகஉலகதண்ணீர் தினமான இன்றுநடைபெறும் கூட்டத்திற்கானகருப்பொருள் ‘குடிநீருக்கானஆதாரத்தினைநிலைப்படுத்துதல்’என்பதாகும்.

ஒவ்வொருவரும் நீரினைபாதுகாத்தல், பயன்பாட்டினைகுறைத்தல் மற்றும் அனைத்துவீடுகளிலும் மழைநீரினைசேகரித்தல் தொடர்பானவிழிப்புணர்வைஏற்படுத்தும் வகையில் இந்தகிராமசபைக்கூட்டம் நடைபெறுகிறது.

2023-ஆம் ஆண்டுசர்வதேசசிறுதானியஆண்டாகஅறிவிக்கப்பட்டுள்ளதைஅடுத்து, அதுகுறித்தும் இதில் விவாதிக்கப்படஉள்ளது.

சிறுதானியவிவசாயம், குறைந்தநீரில் அதிகவிளைச்சல், சிறுதானியத்தால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்படஉள்ளதாகமாநிலஅரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கிராமஊராட்சிகளில் சுத்தமானகுடிநீர், தூய்மை இந்தியா இயக்கம், மகாத்மாகாந்திதேசியஊரகவேலைஉறுதித் திட்டம், மாநிலஊரகவாழ்வாதார இயக்கம், கிராமஊராட்சிகளில் அமைக்கப்பட்டுவரும் அதிவேக இணையதளவசதி, அனைத்துகுடிமக்களும் இ-சேவைமையங்களைதொடங்கும் திட்டம் உள்ளிட்டவைகுறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படஉள்ளதாகஅந்தசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

மனித - வனஉயிரினமோதலைதடுக்கும் வகையில் 14 வழிகாட்டுநெறிமுறைகளைசுற்றுச்சூழல்துறைஅமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ளார்.

>>>>><<<<<

தேனியில் பிரதமரின் உணவுப் பதப்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்கானதொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம் மாவட்டஆட்சியர் திருமதி. ஷஜீவனாதலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

கரூர் மாவட்டத்தில் இ-சேவைமையம் அமைக்கஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறுமாவட்டஆட்சியர் திரு. பிரபு சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டஆட்சியர் திரு. பாஸ்கரபாண்டியன் தலைமையில், வன்கொடுமைதடுப்புச் சட்டம் குறித்தவிழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நேற்றுநடைபெற்றது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கானசிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் சேந்தமங்கலம் வட்டத்தில் வரும் வெள்ளிக்கிழமைநடைபெறவுள்ளது.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டஆட்சியர் திரு. ஆல்பி ஜான் வர்கீஸ் தலைமையில், வில்லிவாக்கம், திருவள்ளூர் கோட்டங்களுக்குஉட்பட்டஊராட்சிமன்றதலைவர்களுடன் நேற்றுஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

>>>>><<<<<

தஞ்சாவூரிலிருந்துகர்நாடகமாநிலம் ஹூப்ளிக்குஅடுத்தமாதம் 4, 11, 18 ஆகியதேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா— ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவதுமற்றும் இறுதிஒருநாள் கிரிக்கெட் போட்டி, இன்றுசென்னையில் நடைபெறவுள்ளது.

சென்னைஎம்.ஏ.சிதம்பரம் விளையாட்டுமைதானத்தில் நடைபெறும் இந்தபோட்டி, பிற்பகல் மணி 1-30-க்கு தொடங்கு தொடங்குகிறது.

மூன்றுபோட்டிகளைக் கொண்ட இந்ததொடரில் இரு அணிகளும் தலா 1 போட்டியில் வெற்றிபெற்றுசமநிலையில் உள்ளதால் இன்றுநடைபெறும் மூன்றாவதுபோட்டிகிரிக்கெட் ரசிகர்களிடையேமிகுந்தஎதிர்பார்ப்பைஏற்படுத்தியுள்ளது.

>>>>><<<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் தில்லிஅணி—உத்தரபிரதேசஅணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

மும்பையில் நேற்றுமாலைநடைபெற்றஆட்டத்தில் முதலில் களமிறங்கியஉத்தரபிரதேசஅணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 138 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கியதில்லிஅணி, 13 பந்துகள் எஞ்சியிருக்கையிலேயேவெற்றி இலக்கைஎட்டியது.

முன்னதாகநேற்றுபிற்பகல் நடைபெற்றபெங்களூருக்குஎதிரானஆட்டத்தில் மும்பைஅணிநான்குவிக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>><<<<<

மத்தியப்பிரதேசமாநிலம் போபாலில் **ISSF**உலகக்கோப்பைதுப்பாக்கிச் சுடும் போட்டிகளைஅம்மாநிலமுதலமைச்சர் திருசிவராஜ் சிங் சௌஹான் நேற்றுதொடங்கிவைத்தார்.

30-க்கும் மேற்பட்டநாடுகளிலிருந்து 200-க்கும் கூடுதலானவீரர்கள் இதில் கலந்துகொள்கின்றனர்.

பதக்கங்களுக்கானவிளையாட்டுப் போட்டிகள் இன்றுமுதல் நடைபெறும் என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<